**Judicial Form No.53**
(See Rule 42)
**DEPOSITION OF WITNESSES**
**(Chapter XXII, Cr.P.C.)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SULUR.**

Calendars
Miscellaneous
Preliminary Register
Sessions

Case No. CC 217 of 2025

Depositions of PW -4 witness for ________ Prosecution / Defence / Court

Name : ராஜேந்திரன்

Father's Name : ரங்கசாமி

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 11th **day of February** 2026.

**(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். போலீசார் சாட்சிகளை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினார்கள்)**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

1. நான் சூலூர் காங்கேயம் பாளையத்தில் குடியிருந்து கொண்டு டிரைவராக வேலை பார்த்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதுதான். கடந்த 16.08.2017 ஆம் தேதி மாலை 07.00 மணியளவில் பழைய ஆர்டிஓ அலுவலகம் எதிரில் கூட்டமாக இருந்தார்கள். நான் என்னவென்று விசாரிக்க விபத்து ஏற்பட்டு இருந்ததாக தகவல் சொன்னார்கள். என்னிடம் போலீசார் கையொப்பம் செய்யுமாறு கேட்டார்கள் நான் கையொப்பம் செய்தேன். எதற்காக செய்தேன் என எனக்கு தெரியாது. கையொப்பம் மட்டும் **அ.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக குறுக்கு விசாரணை மேற்கொள்ள நீதிமன்ற அனுமதி கோரப்பட்டு சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவிக்கப்பட்டு நீதிமன்ற அனுமதியுடன் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை)**

கடந்த 16.08.2017 ம் தேதியன்று நானும் எனது நண்பரான பாலசுப்ரமணியம் என்பவரும் தெரிந்த நண்பருக்கு உடல் நிலை சரியில்லாமல் போனவரை பார்த்துவிட்டு சூலூர் ஆர்.டீ.ஓ ஆபீஸ் பக்கமாக பொன்மணி நகர் போகும் ரோட்டிற்கு எதிர்புறமாக உள்ள ரோட்டில் காலை 07.00 மணிக்கு சென்று கொண்டிருந்தபோது கூட்டமாக இருந்தது என்றும், சென்று பார்த்தபோது போலீசார் நேற்றைய தினம் நடந்த விபத்து வழக்கு சம்பந்தமாக விசாரித்து சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வைமகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள் என்றும், அதற்கு சாட்சியாக பார்வைமகசரில் கையொப்பம் செய்துவிட்டு தற்பொழுது எதற்கு கையொப்பம் செய்தேன் என்று தெரியாது என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** இல்லை

ARUNKUMAR T

Digitally signed by ARUNKUMAR T
Date: 2026.02.11 18:54:37 +0530

**Signature of Witness**

**நீதித்துறை நடுவர்**

**சூலூர்**